www.Padasalai.Net www.Trb-Tnpsc.com

பொருளடக்கம்

சோ. எண்	தேதி	சோதனையின் பெயர்	பக்க எண்	ஆசிரியர் கையொப்பம்
1.				
2.				
3.				
4.				
5.				
6.				
7.				
8.				
9.				
10.				

COMPLETED

Signature of the Teacher with Seal

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

மின்சுற்று வரைப்படம்



காட்சிப்பதிவுகள்

கம்பிச்சுருளின் நீளம் $L =$ 100 cm

அட்டவணை 1:

கொடுக்கப்பட்ட கம்பிச்சுருளின் மின்தடையைக் கண்டுபிடித்தல்

வ.எண்	மின்தடை $R\ (\Omega)$	இடப்பரிமாற்றத்திற்கு முன்பு		இடப்பரிமாற்றத்திற்கு பின்பு		சராசரி $X = \frac{X_1 + X_2}{2}$ (Ω)
		சமன்செய் நீளம், l (cm)	$X_1 = \frac{R(100-l)}{l}$ (Ω)	சமன்செய் நீளம், l (cm)	$X_2 = \frac{Rl}{(100-l)}$ (Ω)	
1	1	14.4	5.9444	85.3	5.8027	5.8736
2	2	25.2	5.9365	74.6	5.8740	5.9052
3	3	33.5	5.9552	66.1	5.8496	5.9024

சராசரி மின்தடை, $X =$ 5.8937 Ω

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net

மீட்டர் சமனச்சுற்றைப் பயன்படுத்தி கம்பிச்சுருள் செய்யப்பட்ட பொருளின் மின்தடை எண் கண்டறிதல்

சோதனை எண்:

தேதி :

நோக்கம்

மீட்டர் சமனச்சுற்றைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்ட கம்பிச்சுருள் செய்யப்பட்ட பொருளின் மின்தடை எண்ணை கண்டுபிடித்தல்.

தேவையான கருவிகள்

மீட்டர் சமனச்சுற்று, கால்வனாமீட்டர், சாவி, மின்தடைப்பெட்டி, இணைப்புக் கம்பிகள், லெக்லாஞ்சி மின்கலம், தொடுசாவி மற்றும் உயர் மின்தடை

வாய்ப்பாடு

$$\rho = \frac{X\pi r^2}{L} \ (\Omega m)$$

இங்கு, $\rho \rightarrow$ கம்பிச்சுருளின் மின்தடை எண் (Ωm)

$X \rightarrow$ கொடுக்கப்பட்ட கம்பிச்சுருளின் மின்தடை (Ω)

$L \rightarrow$ கம்பிச்சுருளின் நீளம் (m)

$r \rightarrow$ கம்பியின் ஆரம் (m)

செய்முறை:

- மீட்டர் சமனச்சுற்றின் இடது இடைவெளியில் மின்தடைப்பெட்டி R–ம், வலது இடைவெளியில் கண்டறிய வேண்டிய மின்தடை X–ம் இணைக்கப்படுகின்றன.
- 1 m நீளமுள்ள கம்பிக்கு குறுக்கே லெக்லாஞ்சி மின்கலம் ஒன்று சாவி வழியே இணைக்கப்படுகிறது.
- உணர்திறன் மிக்க கால்வனாமீட்டர் G–ஆனது தாமிரப்பட்டையின் மையப்புள்ளிக்கும் தொடுசாவி J–க்கும் இடையே உயர் மின்தடை (HR) வழியே இணைக்கப்படுகிறது.
- மின்தடைப்பெட்டியில் தகுந்த மின்தடை தேர்ந்தெடுக்கப்பட்டு, மின்சுற்று இயக்கப்படுகிறது.
- மின்சுற்றின் இணைப்புகளைச் சரிபார்ப்பதற்கு தொடுசாவியானது கம்பியின் A முனையில் தொடப்படுகிறது. கால்வனாமீட்டரின் விலகல் ஒரு திசையில் அமையும். தொடுசாவியை கம்பியின் மறுமுனையான B–ல் தொடும் போது கால்வனாமீட்டர் விலகல் எதிர்திசையில் அமைகிறது. இது மின்சுற்றின் இணைப்புகள் சரியாக உள்ளன என்பதை உறுதி செய்கிறது.
- தொடுசாவியை கம்பியின் மீது நகர்த்தி, கால்வனாமீட்டரில் சுழி விலகலை ஏற்படுத்தும் சமன்செய் புள்ளி J கண்டறியப்படுகிறது.
- அதிலிருந்து சமன்செய் நீளம் $AJ = l$ அளவிடப்படுகிறது.
- $X_1 = \frac{R(100-l)}{l}$ எனும் வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி, மின்தடையின் மதிப்பு X_1 கண்டறியப்படுகிறது.
- R–ன் வெவ்வேறு மதிப்புகளுக்கு சோதனை மீண்டும் செய்யப்படுகிறது.
- R மற்றும் X ஆகியவற்றை இடப்பரிமாற்றம் செய்து, சோதனை மீண்டும் செய்யப்படுகிறது.
- $X_2 = \frac{Rl}{(100-l)}$ எனும் வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி, மின்தடையின் மதிப்பு X_2 கண்டறியப்படுகிறது.
- முதல் நேர்வில் பயன்படுத்திய R–இன் மதிப்புகளுக்கு சோதனை மீண்டும் செய்யப்படுகிறது.
- X_1 மற்றும் X_2 ஆகியவற்றின் சராசரி மதிப்பானது கொடுக்கப்பட்ட கம்பிச்சுருளின் மின்தடை X ஆகும்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

அட்டவணை 2:

கம்பியின் ஆரத்தைக் கண்டுபிடித்தல்

சுழிப்பிழை =

சுழித்திருத்தம் (*zc*) = மீச்சிற்றளவு = 0.01 *mm*

வ.எண்	புரிக்கோல் அளவு *PSR* (*mm*)	தலைக்கோல் ஒன்றிணைவு *HSC* (*div.*)	மொத்த அளவீடு *TR* = *PSR* + (*HSC* × *LC*) (*mm*)	சரிசெய்யப்பட்ட அளவீடு = *TR* ± *ZC* (*mm*)
1	0	54	0.54	0.54
2	0	56	0.56	0.56
3	0	56	0.56	0.56

சராசரி விட்டம் 2r = 0.5533 *mm*

கம்பியின் ஆரம் r = 0.2766 *mm*

r = 0.2766 × 10^{-3} *m*

கணக்கீடு

கம்பிச்சுருளின் மின்தடை எண் $\rho = \frac{\pi r^2 X}{L}$

$\pi = 3.14.$

$r = 0.2766 \times 10^{-3}$ m.

$X = 5.8937\ \Omega.$

$L = 100cm = 1m$

$$\rho = \frac{3.14 \times (0.2766 \times 10^{-3})^2 \times 5.8937}{1}$$

$\rho = 1.4158 \times 10^{-6}\ \Omega m.$

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.PadasalaiNet www.Trb-Tnpsc.com

- திருகு அளவியைப் பயன்படுத்தி, கம்பியின் ஆரம் r கண்டுபிடிக்கப்படுகிறது.
- மீட்டர் அளவுகோலின் மூலம் கம்பிச்சுருளின் நீளம் L அளவிடப்படுகிறது.
- X, r மற்றும் L ஆகியவற்றின் மதிப்புகளிலிருந்து கம்பிச்சுருள் செய்யப்பட்ட பொருளின் மின்தடை எண் கண்டறியப்படுகிறது.

முடிவு:

கொடுக்கப்பட்ட கம்பிச்சுருளின் மின்தடை எண் $\rho =$ 1.4158 x 10^{-6} (Ωm)

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.Tnpsc.com

மின்சுற்றுப்படம்:



காட்சியதிவுகள்:

கம்பிச்சுருள் சுற்றுகளின் எண்ணிக்கை n = 5 சுற்றுகள்

கம்பிச்சுருளின் சுற்றளவு $(2\pi r)$ = 14.4 cm

கம்பிச்சுருளின் ஆரம் r = 7.2 cm

வ.எண்	மின்னோட்டம் I (A)	டேஞ்சன்ட் கால்வனாமீட்டரில் விலக்கம் (டிகிரி)				சராசரி θ (டிகிரி)	$k=\frac{I}{\tan\theta}$
		θ_1	θ_2	θ_3	θ_4		
1	0.5	31	31	31	31	31	0.8321
2	0.6	34	34	34	34	34	0.8895
3	0.7	38	38	38	38	38	0.8959
4	0.8	42	42	42	42	42	0.8884
						சராசரி k=	0.8764

கணக்கீடு

புவிகாந்தப் புலத்தின் கிடைத்தளக் கூறின் மதிப்பு $B_H = \frac{\mu_0 n k}{2r}$

$\mu_0 = 4\pi \times 10^{-7}$ H/m = 12.56×10^{-7} H/m.

n = ...5... சுற்றுகள்.

k = ...0.8764... ஆம்பியர்.

r = ...7.2... x 10^{-2} m.

$$B_H = \frac{12.56\times10^{-7}\times 5\times 0.8764}{2\times 7.2\times10^{-2}} = \frac{55.038\times10^{-5}}{14.4}$$

B_H = ...3.822... x 10^{-5}

B_H = ...3.822... x 10^{-5} டெஸ்லா.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

டேஞ்சன்ட் கால்வனா மீட்டரைப் பயன்படுத்தி புவிக் காந்தப்புலத்தின் கிடைத்தளக் கூறு கண்டறிதல்

சோதனை எண்:

தேதி :

நோக்கம்

டேஞ்சன்ட் கால்வனாமீட்டரைப் பயன்படுத்தி புவி காந்தப்புலத்தின் கிடைத்தளக் கூறினை கண்டறிதல்.

தேவையான கருவிகள்

டேஞ்சன்ட் கால்வனாமீட்டர், திசைமாற்றி, மின்கலத்தொகுப்பு, மின்தடை மாற்றி, அம்மீட்டர் சாவி மற்றும், இணைப்புக்கம்பிகள்

வாய்பாடு:

$$B_H = \frac{\mu_0 n k}{2r} \quad (Tesla)$$

இங்கு, $B_H \rightarrow$ புவிக்காந்தப்புலத்தின் கிடைத்தளக்கூறு (T)

$\mu_0 \rightarrow$ வெற்றிடத்தின் உட்புகுதிறன் ($4\pi \times 10^{-7}\ H\ m^{-1}$)

$n \rightarrow$ சுற்றில் இணைக்கப்பட்ட டேஞ்சன்ட் கால்வனாமீட்டர் கம்பிச்சுருள்களின் எண்ணிக்கை (அலகு இல்லை)

$k \rightarrow$ டேஞ்சன்ட் கால்வனாமீட்டரின் சுருக்கக்கூற்றெண் (A)

$r \rightarrow$ கம்பிச்சுருளின் ஆரம் (m)

செய்முறை:

- டேஞ்சன்ட் கால்வனாமீட்டரின் தொடக்க சீரமைவுகள்

  (அ) டேஞ்சன்ட் கால்வனாமீட்டரின் அடிப்பகுதியில் உள்ள மட்டத் திருகுகளை சரி செய்வதன் மூலம், கால்வனாமீட்டரின் சுழலும் வட்டத்தட்டு கிடைத்தளமாகவும், வட்ட வடிவக் கம்பிச்சுருளின் தளம் செங்குத்தாகவும் அமைக்கப்படுகிறது.

  (ஆ) வட்ட வடிவக் கம்பிச்சுருளை சுழற்றி, அதன் தளமானது காந்த துருவத்தளத்தில் (Magnetic meridian) இருக்குமாறு செய்யப்படுகிறது. அதாவது கம்பிச்சுருளின் தளம் வடக்கு – தெற்கு திசையில் அமைய வேண்டும்.

  (இ) காந்த ஊசிப்பெட்டியை (Compass box) மட்டும் சுழற்றி, அலுமினியக் குறிமுள் 0° – 0° காட்டுமாறு செய்ய வேண்டும்.

- படம் (இ)–ல் உள்ளவாறு இணைப்புகள் தரப்படுகின்றன.
- கம்பிச்சுருளில் உள்ள சுற்றுகளின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட்டு, மின்சுற்று இயக்கப்படுகிறது.
- அலுமினியக் குறிமுள்ளில் விலகலானது 30°-60° இடையே இருக்குமாறு மின்னோட்டத்தின் நெடுக்கம் (Current range) தேர்ந்தெடுக்கப்படுகிறது.
- தகுந்த மின்னோட்டம் மின்சுற்றில் செலுத்தப்பட்டு, அலுமினியக் குறிமுள் முனைகளின் விலக்கங்கள் θ_1 மற்றும் θ_2 குறித்துக் கொள்ளப்படுகின்றன.
- திசைமாற்றியைப் பயன்படுத்தி, மின்னோட்டத்தின் திசை மாற்றப்படுகிறது. எதிர்த்திசையில் அமையும் அலுமினியக் குறிமுள் விலக்கங்கள் θ_3 மற்றும் θ_4 குறித்துக் கொள்ளப்படுகின்றன.
- $\theta_1, \theta_2, \theta_3$ மற்றும் θ_4 ஆகியவற்றின் சராசரி மதிப்பு θ கணக்கிடப்பட்டு, அட்டவணைப் படுத்தப்படுகிறது.
- ஒவ்வொரு மின்னோட்ட மதிப்பிற்கும், குறைப்புக்காரணி (Reduction factor) k கணக்கிடப்படுகிறது. அதன் மதிப்பு மாறிலியாக அமைவதைக் காணலாம்.
- பல்வேறு மின்னோட்ட மதிப்புகளுக்கு, சோதனையானது மீண்டும் செய்யப்பட்டு அளவீடுகள் அட்டவணைப் படுத்தப்படுகின்றன.
- கம்பிச்சுருளின் மீது நூலினைச் சுற்றி, அதன் சுற்றளவு அளவிடப்படுகிறது. பின்னர் அதிலிருந்து கம்பிச்சுருளின் ஆரம் கணக்கிடப்படுகிறது.
- r, n மற்றும் k மதிப்புகளைப் பயன்படுத்தி, புவி காந்தப்புலத்தின் கிடைத்தளக்கூறு கண்டுபிடிக்கப்படுக்கிறது.

முடிவு

கொடுக்கப்பட்ட இடத்தில், புவிகாந்தப் புலத்தின் கிடைத்தளக் கூறின் மதிப்பு B_H = 3.822×10^{-5} டெஸ்லா

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

மின் சுற்று



காட்சிப் பதிவுகள்

கம்பிச் சுருள் சுற்றுகளின் எண்ணிக்கை n =
கம்பிச் சுருளின் சுற்றளவு $(2\pi r)$ =
கம்பிச் சுருளின் ஆரம் r =

அட்டவணை

புவி காந்தப்புலத்தின் கிடைத்தளக்கூறின் மதிப்பை கண்டுபிடித்தல்

வ. எண்	தொலைவு x (cm)	மின்னோட்டம் I (A)	காந்த ஊசிப்பெட்டி கிழக்குப் பகுதியில் உள்ள போது விலக்கம் (டிகிரி)				காந்த ஊசிப்பெட்டி மேற்குப் பகுதியில் உள்ள போது விலக்கம் (டிகிரி)				சராசரி θ (டிகிரி)	$\frac{I}{\tan\theta}$
			θ_1	θ_2	θ_3	θ_4	θ_1	θ_2	θ_3	θ_4		
1.	6	1·2	32	32	33	33	33	33	32	32	32·5	1·8835
2.	6	1·4	35	35	36	36	36	36	35	35	35·5	1·9627

சராசரி $\frac{I}{\tan\theta}$ = 1·9231

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.PadasalaiNet www.TrbTnpsc.com

வட்டக் கம்பிச்சுருளின் அச்சின் மீது காந்தப்புலம் – B_H கண்டறிதல்

சோதனை எண்:

தேதி :

நோக்கம்

விலகு காந்தமானி மற்றும் மின்னோட்டம் தாங்கிய வட்டக் கம்பிச்சுருள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, புவி காந்தப்புலத்தின் கிடத்தளக் கூறினை கண்டறிதல்.

தேவையான கருவிகள்

வட்டக் கம்பிச்சுருள், காந்த ஊசிப்பெட்டி, திசைமாற்றி, மின்கலத்தொகுப்பு, மின்தடை மாற்றி, அம்மீட்டர், சாவி மற்றும், இணைப்புக்கம்பிகள்

வாய்ப்பாடு

$$B_H = \frac{\mu_0 n r^2}{2\left(r^2+x^2\right)^{3/2}}\left(\frac{I}{\tan\theta}\right) \quad (Tesla)$$

இங்கு, B_H → புவிகாந்தப்புலத்தின் கிடைத்தளக்கூறு (*Tesla*)

μ_0 → வெற்றிடத்தின் உட்புகுத்திறன் ($4\pi \times 10^{-7}\ H\ m^{-1}$)

n → மின்சுற்றில் இணைக்கப்பட்டுள்ள கம்பிச்சுருள் சுற்றுகளின் எண்ணிக்கை (அலகு இல்லை)

I → கம்பிச்சுருள் வழியாக பாயும் மின்னோட்டம் (A)

r → வட்டக் கம்பிச்சுருளின் ஆரம் (m)

x → காந்த ஊசிப் பெட்டியின் மையத்திற்கும் கம்பிச்சுருளின் மையத்திற்கும் உள்ள தொலைவு (m)

செய்முறை:

- பின்வரும் தொடக்கச் சீரமைவுகள் செய்யப்படுகின்றன.
  - அ) மட்டத் திருகுகளைச் சரிசெய்து வட்ட வடிவ கம்பிச்சுருள் செங்குத்தாக இருக்குமாறு செய்யப்படுகிறது.
  - ஆ) கிழக்கு – மேற்கு திசையில் மரப்பலகை இருக்குமாறு சரி செய்யப்படுகிறது. அதாவது, அலுமினிய குறிமுள்ளுக்கு இணையாக மரப்பலகை இருக்க வேண்டும்.
  - இ) வட்டக் கம்பிச்சுருளின் தளம் காந்தத்துருவ தளத்தில் இருக்குமாறு கழற்றப்படுகிறது. அதாவது வடக்கு – தெற்குத் திசையில் இருக்க வேண்டும்.
  - ஈ) காந்த ஊசிப்பெட்டியின் மையம் கம்பிச்சுருளின் அச்சில் பொருந்துமாறு செய்யப்படுகிறது.
  - உ) காந்த ஊசிப்பெட்டியை மட்டும் சுழற்றி, அலுமினியக் குறிமுள் $0^\circ - 0^\circ$ காட்டுமாறு செய்யப்படுகிறது.
- மின்சுற்றுப் படத்தில் காட்டியுள்ளவாறு மின் இணைப்புகள் தரப்படுகின்றன.
- கம்பிச்சுருளின் அச்சில் மரப்பலகையின் மீது காந்த ஊசிப்பெட்டி வைக்கப்படுகிறது. கம்பிச்சுருளின் மையத்திற்கும் காந்தஊசிப் பெட்டியின் மையத்திற்கும் இடைப்பட்ட தொலைவு x எனப்படும்.
- அலுமினிய குறிமுள்ளின் விலகல் 30° மற்றும் 60° க்கும் இடையே இருக்குமாறு, தகுந்த மின்னோட்டம் (எ.கா. 1A) கம்பிச்சுருள் வழியே செலுத்தப்படுகிறது. மின்னோட்டத்தை மாற்றுவதற்கு, மின்தடை மாற்றி (Rh) பயன்படுத்தப்படுகிறது.
- மின்னோட்டத்தின் மதிப்பு I –ஆனது அம்மீட்டரில் அளவிடப்படுகிறது.
- அலுமினியக் குறிமுள்ளின் விலகலானது அதன் இரு முனைகளில் இருந்து θ_1 மற்றும் θ_2 எனக் குறித்துக்கொள்ளப்படுகிறது.
- திசை மாற்றி மூலம் மின்னோட்டத்தின் திசையை மாற்றி, θ_3, θ_4 ஆகிய அளவீடுகள் குறித்துக் கொள்ளப்படுகின்றன.
- காந்தஊசிப் பெட்டியானது மரப்பலகையின் மறுபுறத்திற்கு கொண்டுச் செல்லப்பட்டு, அதே x தொலைவில் வைக்கப்படுகிறது.
- மேற்கூறியவாறு θ_5, θ_6, θ_7 மற்றும் θ_8 ஆகிய அளவீடுகள் குறித்துக் கொள்ளப்படுகின்றன.
- எட்டு அளவீடுகளும், அவற்றின் சராசரி மதிப்பும் அட்டவணைப் படுத்தப்படுகின்றன.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net

கணக்கீடு

புவி காந்தப்புலத்தின் கிடைத்தளக்கூறு $B_H = \frac{\mu_0 n r^2}{2(r^2+x^2)^{3/2}}\left(\frac{I}{\tan\theta}\right)$

$\mu_0 = 4\pi \times 10^{-7}$ H/m = 12.56×10^{-7} H/m.

n = ...5.... சுற்றுகள்.

$\frac{I}{\tan\theta}$ = ...1.9231.....ஆம்பியர்.

r = ...7.2....x 10^{-2} m.

x = ...6.....x 10^{-2} m.

$$B_H = \frac{12.56\times10^{-7}\times5\times(7.2\times10^{-2})^2\times1.9231}{2\times((7.2\times10^{-2})^2+(6\times10^{-2})^2)^{3/2}}$$

$$B_H = \frac{6260.75\times10^{-5}}{1646.52}$$

B_H = ...3.8024... x 10^{-5}

B_H = ...3.8024... x 10^{-5} டெஸ்லா.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

- மின்னோட்டத்தின் மதிப்பை மாற்றி (எ.கா. 1.5A), அதே x தொலைவில் சோதனை மீண்டும் செய்யப்படுகிறது.
- கம்பிச்சுருளின் மீது நூலினைச் சுற்றி, அதன் சுற்றளவு அளவிடப்படுகிறது. பின்னர் அதிலிருந்து கம்பிச்சுருளின் ஆரம் கணக்கிடப்படுகிறது.
- கம்பிச்சுருளில் சுற்றுகளின் எண்ணிக்கை n குறித்துக் கொள்ளப்படுகிறது.
- n, r, x மற்றும் $\frac{I}{\tan\theta}$ ஆகியவற்றின் மதிப்புகளைக் கொண்டு, புவி காந்தப்புலத்தின் கிடைத்தள கூறின் மதிப்பு கண்டறியப்படுகிறது.

முடிவு:

கொடுக்கப்பட்ட இடத்தில் புவி காந்தப்புலத்தின் கிடைத்தளக்கூறு B_H = 3.8024 x 10^{-5} டெஸ்லா

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

(a) முப்பட்டகத்தின் கோணம் கண்டறிதல் (*A*)

விளக்கப்படம்



அட்டவணை 1 :

M.S.R – முக்கியகோல் அளவு.
VC – வெர்னியர்கோல் ஒன்றிப்பு.
LC – மீச்சிற்றளவு
TR – மொத்த அளவு.

TR = M.S.R + (VC x LC)

LC = 1'

பிம்பம்	வெர்னியர் *A* (டிகிரி)			வெர்னியர் *B* (டிகிரி)		
	MSR	*VSC*	*TR*	*MSR*	*VSC*	*TR*
முதல் பக்கத்தில் எதிரொளிக்கப்பட்ட பிம்பம்	28° 0'	15	28° 15'	208° 0'	30	208° 30'
இரண்டாவது பக்கத்தில் எதிரொளிக்கப்பட்ட பிம்பம்	149° 0'	15	149° 15'	329° 0'	15	329° 15'
வேறுபாடு 2*A*			121° 0'			120° 45'

சராசரி 2*A* = 120° 52'

சராசரி *A* = 60° 26'

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

முப்பட்டகப்பொருளின் ஒளி விலகல் எண் கண்டறிதல்

வ.எண் :

தேதி :

நோக்கம்

நிறமாலைமானியைப் பயன்படுத்தி முப்பட்டகம் செய்யப்பட்ட பொருளின் ஒளி விலகல் எண்ணைக் கண்டறிதல்.

தேவையான கருவிகள்

நிறமாலைமானி, முப்பட்டகம், முப்பட்டக இறுக்கி, பாதரச மட்டம் மற்றும் சோடியம் ஆவி விளக்கு.

வாய்ப்பாடு

$$\mu = \frac{\sin\left(\frac{A+D}{2}\right)}{\sin\left(\frac{A}{2}\right)}$$ **(அலகு இல்லை)**

இங்கு, μ → முப்பட்டகப்பொருளின் ஒளிவிலகல் எண் (அலகு இல்லை)

A → முப்பட்டகத்தின் கோணம் (டிகிரி)

D → சிறும திசைமாற்றக் கோணம் (டிகிரி)

செய்முறை

1) நிறமாலைமானியின் தொடக்கச் சீரமைவுகள்:

- **கண்ணருகு லென்சு:** குறுக்குக்கம்பிகள் தெளிவாக தெரியுமாறு கண்ணருகு லென்ஸ் சரி செய்யப்படுகிறது.
- **பிளவு:** இணையாக்கியின் பிளவு மெல்லியதாகவும் செங்குத்தாகவும் அமைக்கப்படுகிறது.
- **நிறமாலைமானியின் அடிப்பகுதி:** மட்டத் திருகுகள் மூலம் நிறமாலைமானியின் அடிப்பகுதி கிடைத்தளமாக இருக்குமாறு செய்யப்படுகிறது.
- **தொலைநோக்கி:** தொலைவில் உள்ள பொருளை நோக்கி தொலைநோக்கி திருப்பப்படுகிறது பொருளின் தெளிவான தலைகீழான பிம்பம் கிடைக்குமாறு செய்யப்படுகிறது. தற்போது இணைக்கதிர்களை பெறுமாறு தொலைநோக்கியானது சரி செய்யப்பட்டுள்ளது.
- **இணையாக்கி:** தொலைநோக்கியும் இணையாக்கியும் ஒரே நேர்க்கோட்டில் அமைக்கப்படுகின்றன. பிளவின் தெளிவான பிம்பம் தொலைநோக்கியில் தெரியுமாறு, இணையாக்கி சரி செய்யப்படுகிறது தற்போது இணையாக்கி இணையான ஒளிக்கதிர்களை தருகிறது.
- **முப்பட்டக மேசை:** பாதரச மட்டம் மற்றும் மட்டத் திருகுகளைப் பயன்படுத்தி, முப்பட்டக மேசை கிடைமட்டமாக இருக்குமாறு சரி செய்யப்படுகிறது.

2. முப்பட்டகத்தின் கோணத்தை கண்டறிதல் (A):

- சோடியம் ஆவி விளக்கின் மூலம் பிளவு ஒளியூட்டப்படுகிறது.
- சம பக்க முப்பட்டகமானது அதன் ஒளிவிலகல் விளிம்பு, இணையாக்கியை நோக்கி இருக்குமாறு முப்பட்டக மேசை மீது வைக்கப்படுகிறது.
- இணையாக்கியிலிருந்து வெளிவரும் ஒளியானது முப்பட்டகத்தின் எதிரொளிக்கும் பக்கங்களில் பட்டு எதிரொளிக்கப்படுகிறது.
- முப்பட்டகத்தின் ஒரு பக்கத்தில் இருந்து எதிரொளிக்கப்படும் பிம்பத்தைப் பார்க்கும் வகையில் தொலைநோக்கியானது இடதுபுறம் திருப்பப்படுகிறது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TRB Tnpsc.com

(b) சிறும திசை மாற்றக் கோணம் (D) காணல் :



D - சிறுமதிசைமாற்றக் கோணம்.
T_1 - நேர்க் கதிரில் தொலைநோக்கியின் நிலை.
T_2 -சிறும திசைமாற்ற நிலையில் தொலைநோக்கியின் நிலை.

அட்டவணை 1:

M.S.R – முக்கியகோல் அளவு.
VC – வெர்னியர்கோல் ஒன்றிப்பு.
LC – மீச்சிற்றளவு.
TR – மொத்த அளவு

TR = M.S.R + (VC x LC)

LC = 1'

பிம்பம்	வெர்னியர் A (டிகிரி)			வெர்னியர் B (டிகிரி)		
	MSR	VSC	TR	MSR	VSC	TR
ஒளிவிலகலடைந்த பிம்பம்	51°0'	15	51° 15'	231°0'	15	231° 15'
நேர்க்கதிர் பிம்பம்	90° 0'	0	90° 0'	270° 0'	0	270° 0'
வேறுபாடு D			38° 45'			38° 45'

சராசரி D= 38°45'

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

- பிளவின் எதிரொளிப்பு பிம்பம் செங்குத்து குறுக்குக் கம்பியில் இணையுமாறு, தொடுகோட்டுத் திருகுகள் மூலம் தொலைநோக்கி சரி செய்யப்படுகிறது.
- இரண்டு வெர்னியர் அளவுகோல்களில் இருந்தும் முதன்மைக்கோல் அளவு மற்றும் வெர்னியர் ஒன்றிணைவு ஆகியவை குறித்துக் கொள்ளப்படுகின்றன.
- தற்போது, முப்பட்டகத்தின் மறு பக்கத்தில் இருந்து எதிரொளிக்கப்படும் பிம்பத்தைப் பார்க்கும் வகையில் தொலைநோக்கியானது வலதுபுறம் திருப்பப்படுகிறது.
- மேற்கூறியவாறு மீண்டும் அளவீடுகள் குறித்துக்கொள்ளப்படுகின்றன.
- இந்த இரு அளவீடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு $2A$ ஆகும். இதிலிருந்து முப்பட்டகத்தின் கோணம் A கணக்கிடப்படுகிறது.

3. சிறும திசைமாற்றக் கோணத்தை கண்டறிதல் (D):

- இணையாக்கியில் இருந்து வெளிவரும் ஒளியானது முப்பட்டகத்தின் ஒரு பக்கத்தின் வழியே ஊடுருவி, ஒளிவிலகல் அடைந்து மற்றொரு பக்கம் வழியாக வெளியேறுமாறு முப்பட்டக மேசை குறிப்பிட்ட திசையில் வைக்கப்படுகிறது.
- ஒளிவிலகல் பிம்பத்தை நோக்குமாறு தொலைநோக்கி திருப்பப்படுகிறது.
- தொலைநோக்கியினுள் பார்த்தவாறே,முப்பட்டக மேசை ஒரு குறிப்பிட்ட திசையில் திருப்பப்படுகிறது அதன் மூலம் படுகதிரின் திசையை நோக்கி பிம்பம் நகருமாறு செய்யப்படுகிறது.
- படுகதிரை நோக்கி நகரும் பிம்பமானது ஒரு குறிப்பிட்ட நிலையில் எதிர்திசையில் திரும்புகிறது. இந்நிலையே சிறும திசைமாற்ற நிலை ஆகும்.
- இந்நிலையில், பிம்பமானது செங்குத்து குறுக்குக் கம்பியோடு இணையுமாறு தொலைநோக்கி சுழற்றப்பட்டு பின் பொருத்தப்படுகிறது.
- இரண்டு வெர்னியர் அளவுகோல்களில் இருந்தும் அளவீடுகள் குறித்துக் கொள்ளப்படுகின்றன.
- முப்பட்டக மேசையிலிருந்து முப்பட்டகம் நீக்கப்பட்டு, நேர்க்கதிர் பிம்பம் செங்குத்து குறுக்குக் கம்பியோடு இணையுமாறு தொலைநோக்கி சரி செய்யப்படுகிறது. பின்னர் அளவீடுகள் குறித்துக் கொள்ளப்படுகின்றன.
- அளவீடுகள் அட்டவணைப்படுத்தப்பட்டு, இந்த இரு அளவீடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு சிறும திசைமாற்றக் கோணம் D–ஐத் தருகிறது.
- A மற்றும் D ஆகியவற்றின் மதிப்புகளைப் பயன்படுத்தி, முப்பட்டகம் செய்யப்பட்ட பொருளின் ஒளி விலகல் எண் கண்டறியப்படுகிறது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.Tnpsc.com

கணக்கீடு :

$$\mu = \frac{\sin\left[\frac{A+D}{2}\right]}{\sin\left[\frac{A}{2}\right]}$$

A = 60°26'

D = 38°45'

$$\mu = \frac{\sin\left[\frac{60°26' + 38°45'}{2}\right]}{\sin\left[\frac{60°26'}{2}\right]}$$

$$\mu = \frac{\sin 49°35'}{\sin 30°13'}$$

$$\mu = \frac{0.7613}{0.5033}$$

μ = 1.5126.....(அலகு இல்லை)

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

முடிவு:

1. முப்பட்டகத்தின் கோணம் (A) = ...60°26'..... (டிகிரி)
2. முப்பட்டகத்தின் சிறும திசைமாற்றக் கோணம் (D) = ...38°45'..... (டிகிரி)
3. முப்பட்டக பொருளின் ஒளிவிலகல் எண் μ = ...1.5126.... (அலகு இல்லை)

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

விளக்கப்படம்



படம் (அ) நேர்குத்து படுகதிர் முறை



படம் (ஆ) திசைமாற்றக்கோணம்

காட்சிப் பதிவுகள்

சீற்றணியின் 1 மீட்டரில் உள்ள கோடுகளின் எண்ணிக்கை, N = 5×10^5 கோடுகள்/மீட்டர்

அட்டவணை:

பாதரச ஆவி விளக்கில் உள்ள முக்கிய நிறங்களில் அலைநீளத்தை கண்டறிதல்

TR = MSR + (VC x LC)

LC = 1'

ஒளியின் நிறம்	விளிம்பு விளைவு சுடைந்த ஒளியின் அளவீடு (டிகிரி)												வேறுபாடு 2θ (டிகிரி)			θ (டிகிரி)
	இடது						வலது									
	வெர்னியர் A			வெர்னியர் B			வெர்னியர் A			வெர்னியர் B						
	MSR	VSC	TR	MSR	VSC	TR	MSR	VSC	TR	MSR	VSC	TR	வெர்னியர் A	வெர்னியர் B	சராசரி	
நீலம்	302°0'	0	302°0'	122°0'	0	122°0'	327°0'	0	327°0'	147°0'	0	147°0'	25°0'	25°0'	25°0'	12°30'
பச்சை	299°0'	0	299°0'	119°0'	0	119°0'	330°30'	0	330°30'	150°30'	0	150°30'	31°30'	31°30'	31°30'	15°45'
மஞ்சள்	298°0'	0	298°0'	118°0'	0	118°0'	331°30'	0	331°30'	151°30'	0	151°30'	33°30'	33°30'	33°30'	16°45'
சிவப்பு	296°0'	0	296°0'	116°0'	0	116°0'	333°30'	0	333°30'	153°30'	0	153°30'	37°30'	37°30'	37°30'	18°45'

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

விளிம்பு விளைவுக் கீற்றணி மற்றும் நிறமாலைமானியைப் பயன்படுத்தி ஒரு தொகுப்பு ஒளியில் உள்ள நிறங்களின் அலைநீளம் கண்டறிதல்

சோதனை எண்:

தேதி :

நோக்கம்

விளிம்பு விளைவுக் கீற்றணி மற்றும் நிறமாலைமானி ஆகியவற்றைப் பயன்படுத்தி ஒரு தொகுப்பு ஒளியில் உள்ள நிறங்களின் அலைநீளத்தைக் கண்டறிதல்.

தேவையான கருவிகள்

நிறமாலைமானி, பாதரச வாயு விளக்கு, விளிம்பு விளைவுக் கீற்றணி, கீற்றணி மேசை மற்றும் பாதரச மட்டம்

வாய்ப்பாடு

$$\lambda = \frac{\sin\theta}{nN} \ \text{Å}$$

இங்கு, λ → தொகுப்பு ஒளியில் உள்ள நிறங்களின் அலைநீளம் (Å)

N → கொடுக்கப்பட்ட கீற்றணியின் ஒரு மீட்டர் நீளத்தில் உள்ள கோடுகளின் எண்ணிக்கை (அலகு இல்லை) (N-ன் மதிப்பு கொடுக்கப்பட்டுள்ளது)

n → விளிம்பு விளைவின் வரிசை (அலகு இல்லை)

θ → விளிம்பு விளைவுக் கோணம் (டிகிரி)

செய்முறை:

1) நிறமாலைமானியின் தொடக்கச் சீரமைவுகள்

- **கண்ணருகு லென்சு:** குறுக்குக்கம்பிகள் தெளிவாக தெரியுமாறு கண்ணருகு லென்ஸ் சரி செய்யப்படுகிறது
- **பிளவு:** இணையாக்கியின் பிளவு மெல்லியதாகவும் செங்குத்தாகவும் அமைக்கப்படுகிறது
- **நிறமாலைமானியின் அடிப்பகுதி:** மட்டத் திருகுகள் மூலம் நிறமாலைமானியின் அடிப்பகுதி கிடைத்தளமாக இருக்குமாறு செய்யப்படுகிறது
- **தொலைநோக்கி:** தொலைவில் உள்ள பொருளை நோக்கி தொலைநோக்கி திருப்பப்படுகிறது பொருளின் தெளிவான தலைகீழான பிம்பம் கிடைக்குமாறு செய்யப்படுகிறது தற்போது இணைக்கதிர்களை பெறுமாறு தொலைநோக்கியானது சரி செய்யப்பட்டுள்ளது
- **இணையாக்கி:** தொலைநோக்கியும் இணையாக்கியும் ஒரே நேர்க்கோட்டில் அமைக்கப்படுகின்றன பிளவின் தெளிவான பிம்பம் தொலைநோக்கியில் தெரியுமாறு, இணையாக்கி சரி செய்யப்படுகிறது தற்போது இணையாக்கி இணையான ஒளிக்கதிர்களை தருகிறது.
- **கீற்றணி மேசை:** பாதரச மட்டம் மற்றும் மட்டத் திருகுகளைப் பயன்படுத்தி, கீற்றணி மேசை கிடைமட்டமாக இருக்குமாறு சரி செய்யப்படுகிறது.

2) நேர்க்குத்து படுகதிரை பெறுவதற்கு கீற்றணியைச் சரி செய்தல்

- பாதரச ஆவி விளக்கின் தொகுப்பு ஒளி (வெள்ளை நிற ஒளி) மூலம் பிளவானது ஒளியூட்டப்படுகிறது
- இணையாக்கியுடன் ஒரே நேர்க் கோட்டில் இருக்குமாறு தொலைநோக்கியானது சுழற்றப்படுகிறது பிளவின் பிம்பம் செங்குத்து குறுக்குக்கம்பியில் இணையுமாறு செய்யப்படுகிறது (படம் (அ)1)
- வெர்னியர் அளவுகோலானது $0° - 180°$ என்ற அளவுகளில் இருக்குமாறு, வெர்னியர் வட்டு மட்டும் சுழற்றப்படுகிறது. இதுவே நேர்க்கதிரின் அளவீடு ஆகும்.
- தொலைநோக்கியானது இடஞ்சுழியாக $90°$ சுழற்றப்பட்டு, பின் பொருத்தப்படுகிறது (படம் (அ)2)
- சமதள கீற்றணி ஒன்று கீற்றணி மேசை மீது ஏற்றப்படுகிறது
- கீற்றணியில் பட்டு எதிரொளிக்கும் ஒளியானது தொலைநோக்கியில் பிடிக்கப்படுகிறது எதிரொளிக்கப்பட்ட பிளவின் பிம்பம் வெள்ளை நிறத்தில் அமையும். இந்தப் பிம்பம், செங்குத்துக் குறுக்குக் கம்பியில் இணையுமாறு கீற்றணி மேசை மட்டும் சரி செய்யப்படுகிறது (படம் அ(3))
- தற்போது வெர்னியர் வட்டு விடுவிக்கப்படுகிறது வெர்னியர் வட்டு, கீற்றணி மேசை ஆகிய இரண்டும் தகுந்த திசையில் $45°$ சுழற்றப்படுகின்றன இணையாக்கியில் இருந்து வரும் ஒளியானது கீற்றணி மீது நேர்க்குத்தாக விழுகிறது (படம் (அ)4)

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

கணக்கீடு :

$$\lambda = \frac{\sin\theta}{mN}$$

1) $\lambda_B = \frac{\sin\theta_B}{mN}$

θ_B = 12°30'

m = 1

N = 5×10^5 கோடுகள்/மீட்டர்.

$\lambda_B = \frac{\sin 12°30'}{1 \times 5 \times 10^5}$

$\lambda_B = \frac{0.2164 \times 10^{-5}}{5}$

λ_B = 0.04328×10^{-5}

λ_B = 4328×10^{-10} m = 4328 Å

2) $\lambda_G = \frac{\sin\theta_G}{mN}$

θ_G = 15°45'

m = 1

N = 5×10^5 கோடுகள்/மீட்டர்.

$\lambda_G = \frac{\sin 15°45'}{1 \times 5 \times 10^5}$

$\lambda_G = \frac{0.2714 \times 10^{-5}}{5}$

λ_G = 0.05434×10^{-5}

λ_G = 5434×10^{-10} m = 5434 Å

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

3) பாதரச வாயு விளக்கில் உள்ள தொகுப்பு ஒளியின் அலை நீளத்தை கண்டுபிடித்தல்

- தொலைநோக்கி விடுவிக்கப்பட்டு, இணையாக்கியுடன் ஒரே நேர்க்கோட்டில் கொண்டுவரப்படுகிறது. மையத்தில் உள்ள நேர்க்கதிரின் பிம்பத்தை பெறுமாறு தொலைநோக்கி அமைக்கப்படுகிறது. நிறப்பிரிகை அடையாத இந்தப் பிம்பம் வெள்ளை நிறத்தில் இருக்கும்
- நேர்க்கதிரின் இரு புறங்களிலும் விளிம்பு விளைவு அடைந்த பிம்பங்கள் தோன்றுகின்றன
- விளிம்பு விளைவு அடைந்த பிம்பமானது பாதரச வாயு விளக்கின் முக்கிய நிறங்களை கொண்டிருக்கும். அலைநீளத்தின் ஏறுவரிசையில் இந்த நிறங்கள் அமைந்திருக்கும்
- தொலைநோக்கியானது நேர்க்கதிரின் ஏதேனும் ஒரு புறம் திருப்பப்பட்டு (எ.கா. இடது புறம்), முதல் வரிசை விளிம்பு விளைவு பிம்பத்தைப் பெறுமாறு சரி செய்யப்படுகிறது
- தொலைநோக்கியின் செங்குத்து குறுக்குக் கம்பியானது முக்கிய நிறங்களின் (எ.கா. ஊதா, நீலம், மஞ்சள், சிவப்பு) நிறமாலைவரிகளுடன் இணையுமாறு செய்யப்படுகிறது. ஒவ்வொரு நிறத்திற்கும் இரண்டு வெர்னியர் அளவுகோல்களின் அளவீடுகள் குறித்துக் கொள்ளப்படுகின்றன.
- தற்போது தொலைநோக்கி நேர்க்கதிரின் வலது புறம் சுழற்றப்பட்டு, முதல் வரிசை பிம்பம் பெறப்படுகிறது
- இடது புறம் பெறப்பட்ட அதே நிறங்களின் நிறமாலைவரிகளுடன் செங்குத்து குறுக்குக்கம்பி பொருத்தப்படுகிறது. மீண்டும் ஒவ்வொரு நிறத்திற்கும் இரண்டு வெர்னியர் அளவுகோல்களின் அளவீடுகள் குறித்துக் கொள்ளப்படுகின்றன.
- அளவீடுகள் அட்டவணைப் படுத்தப்படுகின்றன.
- இவ்விரு அளவீடுகளுக்கு இடையே உள்ள வேறுபாடு, குறிப்பிட்ட நிறத்திற்கான 2θ மதிப்பைத் தரும்.
- கொடுக்கப்பட்ட கீற்றணியில் ஒரு மீட்டர் நீளத்தில் உள்ள கோடுகளின் எண்ணிக்கை N ஆனது கீற்றணியிலிருந்து குறித்துக் கொள்ளப்படுகிறது.
- N, n மற்றும் θ ஆகியவற்றின் மதிப்புகளிலிருந்து, பாதரச வாயு விளக்கில் உள்ள முக்கிய நிறங்களின் அலைநீளங்கள் கணக்கிடப்படுகின்றன

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.Tnpsc.com

3) $\lambda_Y = \frac{\sin\theta_Y}{mN}$

θ_Y = 16°45'

m = 1

N = 5×10^5 கோடுகள்/மீட்டர்

$\lambda_Y = \frac{\sin 16°45'}{1 \times 5 \times 10^5}$

$\lambda_Y = \frac{0.2882 \times 10^{-5}}{5}$

λ_Y = 0.05764 x 10^{-5}

λ_Y = 5764 x 10^{-10} m = 5764 Å

4) $\lambda_R = \frac{\sin\theta}{mN}$

θ = 18°45'

m = 1

N = 5×10^5 கோடுகள்/மீட்டர்

$\lambda_R = \frac{\sin 18°45'}{1 \times 5 \times 10^5}$

$\lambda_R = \frac{0.3214 \times 10^{-5}}{5}$

λ_R = 0.06428 x 10^{-5}

λ_R = 6428 x 10^{-10} m = 6428 Å

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

முடிவு:

1. நீல வரியின் அலைநீளம், λ_B =...4328.....Å
2. பச்சை வரியின் அலைநீளம், λ_G =...5434.....Å
3. மஞ்சள் வரியின் அலைநீளம், λ_Y =...5764.....Å
4. சிவப்பு வரியின் அலைநீளம், λ_Y =...6428.....Å

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

மின் சுற்று1:



முன்னோக்கு சார்பில் PN சந்தி டையோடு

அட்டவணை 1

முன்னோக்குச் சார்பு பண்பு வரைகோடு:

வ.எண்	முன்னோக்குச் சார்பு மின்னழுத்த வேறுபாடு $V_f(V)$	முன்னோக்குச் சார்பு மின்னோட்டம் $I_f(mA)$
1.	0.1	0
2.	0.2	0
3.	0.3	0
4.	0.4	0
5.	0.5	0.5
6.	0.6	3.5
7.	0.7	17.5

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

PN சந்தி டையோடின் மின்னழுத்த வேறுபாடு மற்றும் மின்னோட்டம் இடையேயான பண்பு வரைகோடுகளை ஆராய்தல்

சோ.எண் :

தேதி :

நோக்கம்

PN சந்தி டையோடின் மின்னழுத்த வேறுபாடு மற்றும் மின்னோட்டம் இடையேயான பண்பு வரைகோடுகள் (Characteristic curves) வரைந்து, அதிலிருந்து வளைவுப்புள்ளி, மின்னழுத்த வேறுபாடு (Knee voltage) மற்றும் முன்னோக்குச் சார்பு மின்தடை ஆகியவற்றைக் கண்டறிதல்

தேவையான கருவிகள்

PN சந்தி டையோடு (*IN* 4007), மாறுபாட்டு *DC* மின்மூலம், மில்லி அம்மீட்டர், மைக்ரோ அம்மீட்டர், வோல்ட் மீட்டர், மின்தடை மற்றும் இணைப்புக் கம்பிகள்

வாய்ப்பாடு

$$R_F = \frac{\Delta V_F}{\Delta I_F} \ (\Omega)$$

இங்கு,

$R_F \rightarrow$ டையோடின் முன்னோக்கு மின்தடை (Ω)

$\Delta V_F \rightarrow$ முன்னோக்கு மின்னழுத்த வேறுபாட்டில் உள்ள மாறுதல் (V)

$\Delta I_F \rightarrow$ முன்னோக்கு மின்னோட்ட மாறுதல் (mA)

செய்முறை

i) **முன்னோக்குச் சார்பு பண்பு வரைகோடு:**

- முன்னோக்குச் சார்பில், *PN* சந்தி டையோடின் *P*–பகுதி *DC* மின்மூலத்தின் நேர்மின் முனையிலும், *N*–பகுதி எதிர்மின் முனையிலும் இணைக்கப்படுகின்றன.
- மின் சுற்றில் உள்ளபடி இணைப்புகள் தரப்படுகின்றன.
- மாறுபடு *DC* மின்மூலத்தின் உதவியால், டையோடிற்கு குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாடு மாற்றப்படுகிறது.
- கொடுக்கப்படும் முன்னோக்கு மின்னழுத்த வேறுபாடானது (V_F), $0.1V$–இல் இருந்து $0.8V$ வரை $0.1V$–இன் படிகளில் அதிகரிக்கப்படுகிறது. டையோடு வழியே செல்லும் முன்னோக்கு மின்னோட்டம் (I_F) ஆனது மில்லி அம்மீட்டரில் இருந்து குறித்துக் கொள்ளப்படுகிறது. அளவீடுகள் அட்டவணை படுத்தப்படுகின்றன.
- முன்னோக்கு மின்னழுத்த வேறுபாடு மற்றும் முன்னோக்கு மின்னோட்டம் ஆகியவை நேர்க்குறியாக கொள்ளப்படுகின்றன.
- மின்னழுத்த வேறுபாட்டை *X* – அச்சிலும், மின்னோட்டத்தை *Y*–அச்சிலும் கொண்டு வரைபடம் ஒன்று வரையப்படுகிறது. இது முன்னோக்குச் சார்பு பண்பு வரைகோடு எனப்படுகிறது.
- முன்னோக்குச் சார்பு பண்பு வரைகோட்டில் புள்ளியிடப்பட்ட கோட்டினால் குறிக்கப்படும் மின்னழுத்த வேறுபாடு, டையோடின் வளைவுப்புள்ளி அல்லது பயன் தொடக்க அல்லது இயங்கு நிலை தொடக்க மின்னழுத்த வேறுபாட்டைக் தருகிறது.
- முன்னோக்குச் சார்பு வரைகோட்டின் நேர்க்கோட்டு பகுதியில் இருந்து கணக்கிடப்படும் சாய்வின் தலைகீழ் மதிப்பு, டையோடின் முன்னோக்கு மின்தடையைத் தருகிறது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

மின் சுற்று 2:



மின்னோக்கு சார்பில் PN சந்தி டையோடு

அட்டவணை 2

மின்னோக்குச் சார்பு பண்பு வரைகோடு:

வ.எண்	மின்னோக்குச் சார்பு மின்னழுத்த வேறுபாடு $V_R(V)$	மின்னோக்குச் சார்பு மின்னோட்டம் $I_R(\mu A)$
1.	1	50
2.	2	70
3.	3	90
4.	4	100
5.	5	110
6.	6	120
7.	7	130
8.	8	140
9.	9	150
10.	10	160

மாதிரி வரைபடம்:



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

PN சந்திப்பையோடு V-I முன்னோக்கு மற்றும் பின்னோக்கு சார்பு பண்பு வரைபடம்



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

சோ.எண்:
தேதி:

PN சந்தி டையோடின் மின்னழுத்த வேறுபாடு மற்றும் மின்னோட்டம் கிடையேயான பண்பு வரைகோடுகளை ஆராய்தல்

(i) முன்னோக்கு சார்பு:

வ. எண்	V_F (V)	I_F (mA)
1.	0.1	0
2.	0.2	0
3.	0.3	0
4.	0.4	0
5.	0.5	0.5
6.	0.6	3.5
7.	0.7	17.5

(ii) பின்னோக்கு சார்பு:

வ. எண்	V_R (V)	I_R (μA)
1.	1	50
2.	2	70
3.	3	90
4.	4	100
5.	5	110
6.	6	120
7.	7	130
8.	8	140
9.	9	150
10.	10	160

கணக்கீடு:

முன்னோக்கு சார்பு மின்தடை, $R_F = \frac{1}{\text{சாய்வு}} = \frac{\Delta V_F}{\Delta I_F}$

$\Delta V_F = 0.1V$

$\Delta I_F = 14mA = 14 \times 10^{-3} A$

$R_F = \frac{0.1}{14 \times 10^{-3}}$

$= 0.007142 \times 10^{3}$

$R_F = \underline{7.142 \Omega}$

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

ii) **பின்னோக்குச் சார்பு பண்பு வரைகோடு:**

- பின்னோக்குச்ச் சார்பில், DC மின்மூலத்தின் முனைகள் மாற்றப்படுகின்றன. அதாவது டையோடின் P–பகுதி எதிர்மின் முனையுடனும், N–பகுதி நேர்மின் முனையுடன் இணைக்கப்படுகின்றன
- மின்சுற்றில் உள்ளவாறு மின் இணைப்புகள் கொடுக்கப்படுகின்றன.
- மாறுபாட்டு DC மின்மூலத்தின் உதவியால், டையோடிற்கு குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாடு மாற்றப்படுகிறது.
- கொடுக்கப்படும் பின்னோக்கு மின்னழுத்த வேறுபாடானது (V_R) $1V$–இல் இருந்து $5V$ வரை $1V$–இன் படிகளில் அதிகரிக்கப்படுகிறது. பின்னோக்கு சார்பு மின்னோட்டம் (I_R), மைக்ரோ அம்மீட்டர் மூலம் அளவிடப்படுகிறது. அளவீடுகள் அட்டவணைப் படுத்தப்படுகின்றன.
- பின்னோக்கு மின்னழுத்த வேறுபாடு மற்றும் பின்னோக்கு மின்னோட்டம் ஆகியவை எதிர்க்குறியாக மறையாக கொள்ளப்படும்.
- பின்னோக்கு மின்னழுத்த வேறுபாட்டை எதிர்மறை X– அச்சிலும், பின்னோக்கு மின்னோட்டத்தை எதிர்மறை Y–அச்சிலும் கொண்டு வரைபடம் வரையப்படுகிறது. இது பின்னோக்குச் சார்பு பண்பு வரைகோடு எனப்படும்.

முடிவு

PN சந்தி டையோடில் மின்னழுத்த வேறுபாடு மற்றும் மின்னோட்டம் இடையேயான பண்பு வரைகோடுகள் வரையப்பட்டன.

i) PN சந்தி டையோடின் வளைவுப் புள்ளி மின்னழுத்த வேறுபாடு = 0.55 V

ii) PN சந்தி டையோடின் முன்னோக்குச் சார்பு மின்தடை R_f = 7.142 Ω

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

www.Padasalai.Net www.Tnpsc.com

மின்சுற்று1:



முன்னோக்குச் சார்பில் சொனார் டையோடு

அட்டவணை 1

முன்னோக்குச் சார்பு பண்பு வரைகோடு:

வ.எண்	முன்னோக்குச் சார்பு மின்னழுத்த வேறுபாடு $V_F(V)$	முன்னோக்குச் சார்பு மின்னோட்டம் $I_F(mA)$
1.	0.1	0
2.	0.2	0
3.	0.3	0
4.	0.4	0
5.	0.5	0
6.	0.6	0
7.	0.7	0
8.	0.8	4
9.	0.9	14

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

செனார் டையோடின் மின்னழுத்த வேறுபாடு மற்றும் மின்னோட்டம் இடையேயான பண்பு வரைகோடுகளை ஆராய்தல்

நோ.எண் :

தேதி :

நோக்கம்

செனார் டையோடின் மின்னழுத்த வேறுபாடு மற்றும் மின்னோட்டம் இடையேயான பண்பு வரைகோடுகள் வரைந்து, அதிலிருந்து வளைவுப்புள்ளி மின்னழுத்த வேறுபாடு, முன்னோக்குச் சார்பு மின்தடை மற்றும் பின்னோக்கு முறிவு மின்னழுத்த வேறுபாடு ஆகியவற்றைக் கண்டறிதல்

தேவையான கருவிகள்

செனார் டையோடு 1Z5.6V, மாறுபாட்டு DC மின்மூலம் (0–15V), மில்லி அம்மீட்டர், வோல்ட் மீட்டர், 470 Ω மின்தடை மற்றும் இணைப்புக் கம்பிகள்.

வாய்ப்பாடு:

$$R_F = \frac{\Delta V_F}{\Delta I_F} \ (\Omega)$$

இங்கு R_F → டையோடின் முன்னோக்கு மின்தடை (Ω)

ΔV_F → முன்னோக்கு மின்னழுத்த வேறுபாட்டில் உள்ள மாறுதல் (V)

ΔI_F → முன்னோக்கு மின்னோட்ட மாறுதல் (A)

செய்முறை

1) முன்னோக்குச் சார்பு பண்பு வரைகோடு:

- முன்னோக்குச் சார்பில், PN சந்தி டையோடின் P–பகுதி DC மின்மூலத்தின் நேர்மின் முனையிலும், N–பகுதி எதிர்மின் முனையிலும் இணைக்கப்படுகின்றன.
- மின் சுற்றில் உள்ளபடி இணைப்புகள் தரப்படுகின்றன.
- மாறுபாட்டு DC மின்மூலத்தின் உதவியால், டையோடிற்கு குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாடு மாற்றப்படுகிறது.
- கொடுக்கப்படும் முன்னோக்கு மின்னழுத்த வேறுபாடானது (V_F), 0.1V–இல் இருந்து 0.8V வரை 0.1V–இன் படிகளில் அதிகரிக்கப்படுகிறது. டையோடு வழியே செல்லும் முன்னோக்கு மின்னோட்டம் (I_F) ஆனது மில்லி அம்மீட்டரில் இருந்து குறித்துக் கொள்ளப்படுகிறது. அளவீடுகள் அட்டவணை படுத்தப்படுகின்றன.
- முன்னோக்கு மின்னழுத்த வேறுபாடு மற்றும் முன்னோக்கு மின்னோட்டம் ஆகியவை நேர்க்குறியாக கொள்ளப்படுகின்றன.
- மின்னழுத்த வேறுபாட்டை X – அச்சிலும், மின்னோட்டத்தை Y–அச்சிலும் கொண்டு வரைபடம் ஒன்று வரையப்படுகிறது. இது முன்னோக்குச் சார்பு பண்பு வரைகோடு எனப்படுகிறது.
